இனிமையான குழந்தைகளே! தன்னுடைய முன்னேற்றத்திற்காக முயற்சி செய்து கொண்டே இருங்கள், ஞான ரத்தினங்களை தானம் செய்து, எப்பொழுதும் தனக்கும் பிறருக்கும் நன்மை செய்வதற்கு நிமித்தமாக இருங்கள்.

கேள்வி: ஈஸ்வரிய சேவை செய்வதற்கு எந்த குணம் அவசியம் தேவை ? சேவை செய்யக்கூடிய குழந்தைகளுக்குள் எந்த எண்ணம் இருக்கக்கூடாது?

பதில்: ஈஸ்வரிய சேவையில் சுபாவம் மிக மிக இனிமையாக இருக்க வேண்டும். கோபத்தில் வந்து யாரிடமாவது கண்ணைக் காண்பித்தால் பலருக்கு நஷ்டம் ஏற்படும். சேவை செய்யக் கூடிய குழந்தைகளுக்குள் அகங்காரம் மற்றும் கோபம் முற்றிலும் இருக்கக்கூடாது. இந்த விகாரம் தடையின் ரூபமாக மாறுகிறது. பிறகு மாயை நுழைந்து பல குழந்தைகளுக்குள் சந்தேக புத்தியை ஏற்படுத்தி விடுகிறது. ஈஸ்வரிய சேவையை செய்யக்கூடிய குழந்தைகள் வேலையை விட்டுவிட்டு இந்த சேவை செய்வேன் என்ற எண்ணம் வரக்கூடாது. ஒரு வேளை வேலையை விட்டு விட்டு இந்த சேவையை செய்யவில்லை என்றால் சுமை அதிகமாகி விடும்.

பாடல்: ஓம் நமசிவாய .....

ஓம் சாந்தி. பக்தர்கள் ஓம் நமசிவாய என்று சொல்லும் போது சிவலிங்கத்தை மற்றும் சிவனின் கோவிலை நினைப்பார்கள். நமஹ என்று கூறி பூஜை செய்வார்கள். அது பக்தி. நாம் தாயும் நீயே தந்தையும் நீயே........ என்று சிவபாபாவைக் கூறுவோம். இப்பொழுது நீங்கள் சித்திரத் திற்கு கூற மாட்டீர்கள். சிவபாபா நம்மை படிக்க வைத்துக் கொண்டு இருக்கின்றார் என உங்களுக்குத் தெரியும். இரவு பகல் வித்தியாசம் ஆகிவிட்டது. இந்த உலகத்திற்குத் தெரிய வில்லை சிவபாபா நிராகாரர் வந்து பாடசாலையில் படிக்க வைக்கின்றார். என்ன படிக்க வைக் கின்றார், எளிய இராஜயோகம் மற்றும் ஞானம். கிறிஸ்துவின் புத்தகம் கூட இருக்கின்றது. கிறிஸ்து கொடுத்த ஞானம் அவருடைய பைபிளாக உருவாக்கப்பட்டுள்ளது. இங்கே சிவபுராணம் இருக்கின்றது. ஆனால் அதை வேறு யாரோ உருவாக்கி உள்ளனர். உண்மையில் உண்மையான சிவ புராணம் கீதையாகும். பாபா உங்களுக்கு புரிய வைத்திருக்கின்றார். நீங்கள் மற்றவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். சிவபாபா என்ன புரிய வைத்திருக்கிறார். சிவனுடைய பிறவியைக் கூட கூறுகிறார்கள். இப்போது சிவபுராணம் என்று கீதையைக் கூறலாமா? அல்லது சிவபுராணத்தைக் கூறலாமா? இரண்டிற்கும் கூற முடியாது. பாரதத்தின் தர்ம சாஸ்திரம் ஒன்று தான் இருக்க வேண்டும். யார் தர்மத்தினை ஸ்தாபனை செய்கிறார்களோ அவர்களின் வாழ்க்கைக் கதையை உருவாக்குகின்றார்கள். இவர்கள் இதைக் கூறினர், அதைக் கூறினர். கிறிஸ்து கூட ஞானத்தை கூறியிருப்பார். அதுவே பைபிள் ஆக்கப்பட்டு இருக்கின்றது. அந்த புராணத்திலும் பல கதைகள் உள்ளன. இப்போது குழந்தை களுக்கு கதை கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் பார்வதியின் பெயரைப் போட்டுவிட்டனர். அதில் பவித்திரதாவின் உறுதிமொழி எடுக்கப்பட்டது என்பதைக் காண்பிக்கவில்லை. மன்மனாபவ என்ற வார்த்தை சிவபுராணத்தில் இருக்காது. சிவபுராணம் தனியாகும். இது ஸ்ரீமத் பகவத் கீதையாகும். பகவான் ஒருவரே என்பதை நிரூபிக்க வேண்டும். அவருடைய

பெயர் சிவன் ஆகும். அந்த கீதை கிருஷ்ண புராணம் ஆகிவிடுகிறது. உண்மையில் கிருஷ்ணர் பதீத பாவனர் கிடையாது. சிவன் தான் பதீதபாவனர் ஆவர். பாரதத்தின் தர்ம சாஸ்திரம் கீதையாகும். சிவபுராணத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். கீதையினால் தேவி தேவதா தர்மம் ஸ்தாபனை ஆகியது என்று இப்பொழுது கூறுவார்கள். அதை சிவன் தான் செய்ய முடியும். கிருஷ்ணரும் கருப்பில் இருந்து வெள்ளையாகிறார். நிறைய வித்தியாசம் இருக்கின்றது. குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்படுகிறது. யார் புரிந்து கொள்கிறார்களோ அவர்களுடைய கடமை அலௌகீக காரியத்தை செய்ய வேண்டும். மகிழ்ச்சி அடைய வேண்டும். அளவற்ற பொக்கிஷம் கிடைக்கின்றது என்றால் தானம் அளிக்க வேண்டும். பாபாவின் அறிமுகத்தை அளித்தல் எளிதாகும். பக்தர்கள் பகவானை நினைக்கிறார்கள். பகவான் வந்து பலனை அளிக்கிறார். என்ன பலன்? பகவான் ஜீவன் முக்தியைத் தான் அளிப்பார். அனைவருக்கும் சத்கதியை அளிக்கக்கூடிய வள்ளல் கிருஷ்ணராக இருக்க முடியாது. பரம்பிதா பரமாத்மாவைத் தான் கூற முடியும். பரமாத்மா நிராகாரர் என்பதை நீங்கள் அறிகிறீர்கள். கிருஷ்ணரை பரமாத்மா என்று கூறமுடியாது. கிருஷ்ணர் அனைத்து ஆத்மாக் களின் தந்தை ஆகமுடியாது. அனைத்து ஆத்மாக்களின் தந்தை பரம்பிதா பரமாத்மா தான் என்று பாடப்பட்டுள்ளது. குழந்தைகள் நன்கு பாபாவின் அறிமுகத்தை அளிக்க வேண்டும். அவர்களோ சர்வ வியாபி அல்லது லிங்கம் என்று கூறுகிறார்கள். நல்லது. லிங்கத்தின் தொழில் என்னவாக இருக்கும். பரம்பிதா பரமாத்மாவின் மகிமை பதீதபாவனர் ஞானக்கடல் ஆகும். இந்த போஸ்டரை வெளியில் வைக்க வேண்டும். யார் வந்தாலும் படிக்கட்டும். நீங்கள் இராதை கிருஷ்ணர் அல்லது லட்சுமி நாராயணர் கோவிலுக்குச் சென்று புரிய வைக்க வேண்டும். நம்முடைய லட்சுமி நாராயணரின் படம் மிகவும் நன்றாக இருக்கின்றது. இதை வைத்து புரிய வைக்க வேண்டும். இலட்சுமி நாராயணரின் கோவிலைச் சார்ந்தவர்கள் நிச்சயம் கீதையைப் படித்திருப்பார்கள். தன்னுடைய முன்னேற்றத்திற்காக முயற்சி செய்ய வேண்டும். பாபாவிட மிருந்து உயர்ந்த ஆஸ்தி பெற ஆர்வம் வேண்டும். தனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்ய வேண்டும். சிவபாபா அனைவருக்கும் நன்மை செய்யக்கூடியவர். நீங்களும் நன்மை செய்யக் கூடியவர் ஆக வேண்டும். எனக்கு ஒருபோதும் தீமை நடக்காது என்று பாபா கூறுகின்றார். தீமை செய்யக்கூடியவன் இராவணன் ஆவான். இது மனிதர்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் சென்று புரிய வைக்க வேண்டும். மேகத்தை நிரப்பிக் கொண்டு சென்று பிறகு பொழிய வேண்டும். எவ்வளவு ஆர்வம் இருக்க வேண்டும். தானம் செய்யவில்லை என்றால் தனக்கு நன்மை செய்வில்லை என்று நிச்சயம் கூறுவார்கள். அப்போது மற்றவர்களுக்கும் கூற முடியாது. சென்டர்களுக்கு மிகவும் நல்லவர்கள் வருகிறார்கள். ஆனால் மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அவர்கள் செய்வதில்லை. கேட்கிறார்கள், பிறகு வேலையில் களைத்து, வீட்டுக்கு சென்றதும் முடிந்தது. தானம் கொடுக்கவில்லை என்றால் அவர்கள் பிராமணர்கள் கிடையாது. நாம் தேவதை ஆக வேண்டும் என பிராமணர்களுக்குத் தெரியும். ஒவ்வொருவரும் அவரவர் மனதுடன் பேசவேண்டும். ஒரு வேளை யாரையும் தேவதை யாக்கவில்லை என்றால் எப்படி பிராமணன் என்பது. நான் கல்யாணகாரி என்று சிவபாபா கூறுகின்றார். நீங்களும் கல்யாணகாரி ஆக வேண்டும். யாருக்கு தாரணை ஆகவில்லையோ அவர்களுக்கு ஸ்தூல சேவை இருக்கின்றது. இங்கே குழந்தைகள் வருகிறார்கள் என்றால், அவர்களுக்கு சேவை நடந்திருக்கின்றது.

சேவை மையங்களில் நாம் எவ்வளவு நன்மை செய்திருக்கின்றோம் என்று குழந்தைகள் தன்னையே கேட்டுக் கொள்ள வேண்டும். பலர் வருகிறார்கள். மிகச் சிலரே சேவை செய்கிறார்கள். மற்றவர்கள் தொழில் போன்றவைகளில் ஈடுபடுகிறார்கள். தூய்மையாக மாற வேண்டும் என்று மட்டும் நினைக்கிறார்கள். ஆனால் பணத்தையும் தானம் செய்ய வேண்டும். ஒரு வேளை நாம் யாருக்கும் நன்மை செய்வில்லை என்றால் என்ன பதவி அடைவோம் என்று தன்னையே கேட்க வேண்டும். நிறைய குழந்தைகள் நன்மை செய்து வழிகாட்டியாக வருகிறார்கள். அவர்களிலும் வரிசைக்கிரமம் இருக்கின்றது. சிலர் முதலாவதாகவும், சிலர் இரண்டாவதிலும், சிலர் மூன்றாவதிலும் வைக்கலாம். எனவே தனக்கு நன்மை செய்து கொள்ள வேண்டும். யார் தனக்கே நன்மை செய்து கொள்ள வில்லையோ அவர்கள் என்ன பதவி அடைய முடியும். இவ்வாறு பல சென்டர்கள் இருக்கின்றன. அங்கே பல குழந்தைகள் சேவை செய்வதில்லை. போய் தானம் செய்வதற்கு ஏற்ற சக்தியில்லை. காலையில் கோயில்களில் பலர் வருகிறார்கள். தேவதா தர்மத்தினர் யார் என்று போய் தேட வேண்டும்.

இப்போது நான் இந்த உடலில் வந்திருக்கின்றேன் என பாபா கூறுகின்றார். அங்கேயோ சிறிய உடலில் சென்று ஆத்மா பிரவேசமாகிறது. பேய் நிழலைப் போன்று வருகிறார்கள். இதுவும் அதிசயமாக இருக்கின்றது. எப்படி சுற்றித் திரிந்து கொண்டு இருக்கின்றார்கள். யார் இதை யெல்லாம் ஆராய்வது. நாடகத்தில் ஆத்மாவிற்கு உடல் கிடைக்காத காரணத்தால் அலை கின்றது. நிழல் போன்ற ரூபத்தை எடுக்கின்றது. எப்படி நிழல் இருக்கின்றதோ அது போன்று. பேயினுடைய நிழல் ஏற்படுவதில்லை. வந்தது, மறைந்து போய்விடுகிறது. இந்த விஷயங்களில் நாம் போக வேண்டியதில்லை. அவசியமில்லை. இந்த தேடுதலில் சென்றால் சிவபாபா மறந்து போய்விடும். பாபாவின் கட்டளை-நிராகாரர் பாபாவை நினையுங்கள் என்பதாகும். தன்னுடைய மற்றும் பிறருடைய தேகத்தை மறக்க வேண்டும். அனைவருக்கும் அன்பானவர் சிவபாபா ஆவார். வேறு எந்த விஷயங்களிலும் செல்லாமல் பாபாவை நினையுங்கள் என்று பாபா கூறுகின்றார். இது நினைவு யாத்திரையாகும். மன்மனாபவ என்பதன் பொருள் இதுவேயாகும். கிருஷ்ணர் இவ்வாறு கூறமுடியாது. கிருஷ்ணரை வழிகாட்டி என்றும் கூற முடியாது. நிராகாரர் தான் வழிகாட்டியாக இருந்து அனைத்து ஆத்மாக்களையும் கொசுக் கூட்டம் போன்று அழைத்துச் செல்கிறார். ஆத்மாக்களின் வழிகாட்டியாக கிருஷ்ணர் இருக்க முடியாது. அவர் மறுபிறவியில் வரவேண்டும். எனவே பாபாவின் அறிமுகத்தை அனைவருக்கும் கொடுக்க வேண்டும். பக்தர்களின் பகவான் ஒருவரே. என்னை மட்டும் நினைத்தால் விகர்மங்கள் அழிந்து போகும் என்று அந்த தந்தை கூறுகின்றார். சேவையினுடைய ஆர்வம் குழந்தைகளுக்கு இருக்க வேண்டும்.

குழந்தைகள் மதுபனில் முரளி கேட்பதற்காக வருகிறார்கள் என்றால், கூறக்கூடியவரும் நிச்சயம் வேண்டும். பாபா எங்கே சென்றாலும் சேவை தான் செய்வார். சேவையினுடைய ஆர்வம் இருக்கின்றது. குழந்தைகள் நினைக்கிறார்கள். அவர்கள் எதிரில் முரளியை கேட்டு மகிழ்ச்சி அடைவார்கள். ஒரு வழி பத்து காரியத்தை செய்கிறது. பெரிய பெரிய சபைகளில் பாபா செல்ல முடியாது. அது குழந்தைகளின் வேலையாகும். குழந்தைகளிடம் கேள்வி பதில்

கேட்பார்கள். சந்நியாசி போன்றோர் பாபாவின் முன்பு வரமாட்டார்கள் அவர்களுக்கு மரியாதை வேண்டும். பாபாவின் பார்ட் அதிசயமாக இருக்கின்றது. எது முடிந்ததோ டிராமா. இன்னும் போகப்போக நிறைய குழந்தைகள் சந்திப்பதற்காக வருவார்கள். முதலில் குழந்தைகளுக்குப் புரிய வைக்க வேண்டும். கோப கோபியர்கள் தான் ஒவ்வொரு வீட்டிலும் அறிமுகத்தை அளிக்க வேண்டும். எங்களுக்குத் தெரியாதே என்று ஒருவரும் இருந்து விடக்கூடாது. ஒருவரும் புகார் செய்து விடக்கூடாது. புகார் செய்வதற்கு ராஜா ராணி யாரும் இல்லை. புதிய கலைகளை கண்டுபிடிக்கிறார்கள் என்றால், அரசாங்கத்திற்குக் காண்பித்து விருத்தியடையச் செய்வார்கள். இங்கேயோ மக்கள் மக்களை ஆளுகின்றார்கள். குழந்தைகள் தான் அழைக்க வேண்டும். இதற்காக படங்கள் போன்றவைகளை அச்சடித்துக் கொண்டேயிருக்கின்றார்கள். இந்த சித்திரங்கள் வெளியே கூட போகும். குழந்தைகள் உழைக்க வேண்டும். எந்தெந்த மொழிகள் தெரியுமோ அந்தந்த மொழிகளில் சென்று புரிய வைக்க வேண்டும். பல மொழிகள் இருக்கின்றது. பூனா மற்றும் பெங்களூர் பக்கம் சேவையை அதிகப்படுத்துங்கள் என்று பாபா ஆலோசனை வழங்குகின்றார். அனைவருக்கும் தெரியவேண்டும் அனைத்து மொழிகளிலும் நோட்டீஸ் அச்சடிக்க வேண்டும். எல்லையற்ற புத்தி வேண்டும். பாபா வேலையை விட்டு விடட்டுமா என்பதுவும் கூடாது. வேலையை விட்டுவிட்டு பிறகு இந்த சேவையும் செய்ய முடியவில்லை என்றால் சுமை அதிகமாகிவிடும். இதில் சுபாவம் மிகவும் இனிமையாக இருக்க வேண்டும். பலருக்கும் இன்னும் கோபம் இருக்கின்றது. கண்களைக் காண்பித்து விடுகிறார்கள். பிறகு ரிப்போர்ட் வருகின்றது. நல்ல நல்ல குழந்தைகள் எங்களுடையதை கேட்பதில்லை என்று எழுதுகிறார்கள். இந்த வார்த்தைகள் வரக்கூடாது. குழந்தைகளுக்குள் தேக அகங்காரம் மற்றும் கோபம் இருந்தால் பலருக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள். பாபாவிற்கு குழந்தைகளைப் பற்றி எவ்வளவு கவலை இருக்கின்றது. அனைத்து குழந்தைகளையும் பார்க்க வேண்டி இருக்கின்றது. மம்மா குழந்தையாக இருந்தார். இருப்பினும் அம்மா என அழைக்கப்பட்டார். அவருக்கு கவலை இருந்தது. ஞானத்தில் கூட எங்கேயாவது மாயை நுழைந்து விடுகிறது. பிறகு பலர் சந்தேக புத்தி உடையவராகி விடுகிறார்கள். ஒவ்வொரு அடியிலும் எவ்வளவு தடை ஏற்படுகிறது. இன்று குழந்தையாக இருக்கின்றார். நாளை மாறி விடுகிறார். விகாரங்களுக்காக எவ்வளவு சண்டை ஏற்படுகின்றது. இந்த அமைப்பை பற்றி ஏன் நிந்திக்கின்றார்கள் என பலர் கேட்கிறார்கள். புரிந்து கொள்ளவில்லை அல்லவா ! சாஸ்திரங்களில் கிருஷ்ணரை எவ்வளவு நிந்தனை செய்திருக்கிறார்கள். அவர்களை (பெண்களை) விரட்டினார் இது செய்தார், அது செய்தார் என்கின்றனர். கிருஷ்ணர் இவ்வாறு செய்ய முடியாது. இங்கே கூட விரட்டுவதின் களங்கம் சுமத்துகிறார்கள். வீடு வாசலை விட வைக்கின்றார். ஏன் விட வைக்கின்றார். புரிய வைக்கும் வரை ஏன் தடைகள் வருகின்றது? இது யாருக்கும் தெரியவில்லை. முக்கியமானது காமவிகாரமாகும். குழந்தைகளாகிய நீங்கள் இதை வெற்றி அடைகிறீர்கள்.

இவர் அதிசயமான தந்தையாவார். பிரம்மா மூலமாகத்தான் பிராமணர்கள் படைக்கப்படு கிறார்கள். முதன் முதலில் சிவபாபாவின் அறிமுகத்தை அளிக்க வேண்டும். அவரிடமிருந்து ஆஸ்தி கிடைக்கின்றது. அதிர்ஷ்டத்தில் இல்லை என்றால் மறந்துவிடுகிறாகள். மாயை இப்படிப்பட்டது எவ்வளவு மாயையின் தடைகள் ஏற்படுகின்றது. தாரணை ஆவதில்லை. இதுவும் தடை அல்லவா? ஏன்

இவ்வளவு எளிதாக சேவை செய்ய முடிவதில்லை. பகவான் தந்தை அவரே ஆவார். அந்த தந்தையை நினைவு செய்யுங்கள். பகவான் வாக்கு என்னை மட்டும் நினைத்தால் என்னிடமிருந்து ஆஸ்தி கிடைக்கும். ஓ, இறை தந்தையே! என பக்தர்கள் கூறுகிறார்கள். அல்லவா? எனவே தந்தையிடமிருந்து சொத்து கிடைத்துக் கொண்டு இருக் கின்றது. சிறிதாவது சேவை செய்வதற்கான ஆர்வம் இருக்க வேண்டும். இல்லை என்றால் உயர்ந்த பதவி பெற முடியாது. நிறைய சேவைகள் உள்ளன. சண்டைகளும் நிறைய இருக் கின்றது. பாபாவின் பெயர் கூட மறைந்திருக்கின்றது. ஞானமும் மறைந்திருக்கிறது. எனவே அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். நமக்கு பாபாவின் கட்டளை கிடைத்திருக்கின்றது. அழைக்க வேண்டும். இதில் யாரும் கோபப்படமாட்டார்கள். சேவைக்காக போஸ்டர்ஸ் அச்சடிக்கப்பட்டு இருக்கின்றது. வைப்பதற்காக இல்லை. சிவாய நமஹ என்ற வார்த்தை நன்றாக இருக்கின்றது. முழுமையாக சிவபாபாவின் அறிமுகம் இருக்கின்றது. நிராகார சிவபாபா வந்துள்ளார். நிச்சயமாக சொத்து கொடுத்திருப்பார். வந்து பதீத உலகத்தை தூய்மை யாக்கியிருக்கிறார். இவ்வாறு எல்லாம் தனக்குத் தானே சிந்தித்து பிறகு சென்று புரிய வைக்க வேண்டும். சிவனுடைய கோயில்கள் நிறைய இருக்கின்றது. குப்த வேடத்தில் சென்று பேச வேண்டும். இந்த சிவன் யார். சிவபாபாவிற்கு நிராகார் பரமாத்மா என்று கூறப்படுகிறது. அவர் என்ன செய்தார். இவ்வளவு கோவில்கள் கட்டியிருக்கிறார்கள். யுக்தியோடு சென்று புரிய வைக்க வேண்டும். இப்போது புரிந்து கொண்டாலும் சரி அல்லது புரியாவிட்டாலும் சரி. கடைசியில், யாரோ எங்களுக்குப் புரிய வைத்தனர் என்பது நினைவிற்கு வரும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீக தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தனக்கு நன்மை செய்து கொள்வதற்காக சேவையில் மிக மிக ஆர்வம் இருக்க வேண்டும். களைத்துப் போய் அமர்ந்து விடக்கூடாது. மனிதர்களை தேவதையாக மாற்று வதற்காக சேவை நிச்சயம் செய்ய வேண்டும்.

2. யாராவது ரிப்போர்ட் செய்யும் அளவிற்கோ அல்லது தாய் தந்தை கவலைப்படும் அளவிற்கோ எந்த ஒரு கர்மமும் செய்யக் கூடாது. எந்த ஒரு நிலையிலும் தடை ரூபமாகக் கூடாது.

வரதானம் : மரியாதைகள் என்ற கோட்டிற்குள் எப்பொழுது குடைநிழலின் அனுபவம் செய்யக்கூடிய மாயாஜீத், வெற்றியாளர் ஆகுக.

பாபாவின் நினைவு தான் குடை நிழலாக இருக்கிறது, எந்தளவு நினைவில் இருக் கிறோமோ, அந்தளவு அவருடைய துணை அனுபவம் ஆகும். குடைநிழலில் இருப்பது என்றால் சதா பாதுகாப்பாக இருப்பதாகும். யார் எண்ணத்தில் குடைநிழலை விட்டு வெளியில் செல்கிறார் களோ, அவர்கள் மீது மாயாவின் போர் ஏற்படுகிறது. குடைநிழலுக்கு கீழே, மரியாதை என்ற கோட்டிற்குள் இருப்பதினால் யாருக்கும் உள்ளே வர தைரியம் இருக்காது. ஆனால் ஒருவேளை கோட்டிற்கு வெளியே சென்று விட்டால், மாயா புத்திசாலி ஆகிவிடும்.

ஆகையால் துணையின் அனுபவத்தினால் மாயாவை வென்றவர் ஆகுங்கள்.

சுலோகன்: அசரீரி ஆவதற்கான பயிற்சி தான் இறுதி (சமாப்தி) காலக்கட்டத்தை அருகாமையில் கொண்டு வருவதற்கான ஆதாரமாகும்.